**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No. 110/2019**

**2024** ம் வருடம் செப்டம்பர் திங்கள் 10 ம் நாள் வாதி தரப்பில் 1 வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டு 10 வது விதியின் படி திரு.திருநாவுக்கரசு, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராதாகிருஷ்ணன் | கிராமம் | : |
| தந்தை / கணவர் பெயர் | : | தொழில் | : |
| வயது | : | | |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:

1. பிரதிவாதி கட்டியுள்ள காம்பவுண்டு சுவருக்கு மேற்கு பக்கம், எனது இடத்தின் வடக்கு பக்கத்தில் 3 வீடுகள் உள்ளது. எனது இடத்திற்கு கிழக்கு பக்கம் சந்து உள்ளது என்று நான் தாக்கல் செய்த பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த சந்து கோவிலுக்கு முன்புறமாக வந்து சேரும் என்றால் சரியல்ல.

2. கோவிலுக்கும், பிரதிவாதி இடத்திற்கும் தெற்கு பக்கம் பாதை ஒன்று உள்ளது என்றால் சரிதான். அந்த பாதை என் வீட்டுடன் முடிகிறது.

3. எனது இடத்தின் கிழமேல் அளவைப் போலவே வடக்கு பக்கம் உள்ளவர்களுக்கும் அளவு உள்ளது என்றால் சரியல்ல.

4. தாவா சொத்து பிரதிவாதிகளின் காம்பவுண்ட் சுவருக்குள் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

5. நீதிமன்ற ஆணையர் இடத்தை அளக்கும் போது நான் அங்கு இருந்தேன்.தாவா சொத்துக்களை சுற்றியுள்ள அளவுகளை கிராம புல வரைபடத்தின் அடிப்படையில் அளந்தார்கள் என்றால் சரிதான்.

6. சர்வே எண்.412 க்கான கிராம புல வரைபடத்தை நான் பார்த்துள்ளேன். அந்த வரைபடத்தில் பாதை எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

7. பிரதிவாதி காம்பவுண்டு சுவர் கட்டும்போது எனது இடத்திற்கு வடக்கே உள்ளவர்கள் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் பிரதிவாதி எனது இடத்தை சேர்த்து கட்டியதால் நான் ஆட்சேபனை செய்தேன். அவர்கள் ஆட்சேபனை செய்தார்களா என்று எனக்கு தெரியாது.

8. ஆணையர் தாக்கல் செய்த வரைபடத்தை நான் பார்க்கவில்லை. பிரதிவாதி சுற்றுச்சுவர் கட்டும்போது நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. காம்பவுண்டு சுவர் கட்டவில்லை. ஆரம்பித்ததும் பிரச்சனை ஏற்பட்டதால் நிறுத்தியிருந்தார். நான் ஒரு வாரம் வெளியூர் சென்ற நேரத்தில் கட்டி முடித்து விட்டார்.

10. பிரதிவாதியின் சுற்றுச்சுவரின் மேற்கு பக்கம் நான் மாடு கட்டி வளர்த்து வந்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் மாடுகளே கிடையாது. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. நான் மாடுகள் வளர்த்து வருவதால் வெளியூர் செல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் காம்பவுண்டு சுவர் கட்டுவதை ஆட்சேபிக்கவில்லை என்றால் சரியல்ல.

12. நான் பிரதிவாதியின் சுற்றுச்சுவருக்கு மேற்கு பக்கம் உள்ள தென்வடல் சந்தில் 5 அடி ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13. மேற்படி 5 அடி சந்தை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்பதற்காக பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

14. பிரதிவாதி வெளிநாட்டில் இருக்கும்போது எனக்கு பொருளுதவி

செய்தார் என்றால் சரியல்ல. தற்போது பொருளுதவியை நிறுத்தியதால் அவர் மீது கோபம் கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

15. நான் பிரதிவாதியின் சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்தில் 1984 ம் ஆண்டு கிரையம் பெற்ற நாள் முதல் வாழ்ந்து வருகிறேன்.

16. பிரதிவாதி தாவா சொத்தை எப்போது கிரையம் பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

17. தாவா சொத்து பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. நான் எனது கிரைய ஆவணத்தில் உள்ள தவறான அளவுகளின் அடிப்படையில் பிரதிவாதியின் சொத்தின் மீது உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள வழக்கின் பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)